# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

**கே.வீ. தங்கபாலு**
தலைவர்

தேதி : 13-10-2011

பத்திரிகைச் செய்தி :

## காங்கிரஸ் போட்டி வேட்பாளர்கள் :

# ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாவட்டத் தலைவர்களுக்கு அதிகாரம்

*தலைவர் திரு. கே.வீ. தங்கபாலு அறிவிப்பு*

உள்ளாட்சித் தேர்தலில் மக்களின் மகத்தான ஆதரவு இன்றைக்கு காங்கிரசுக்குத் தான் என்ற அரசியல் சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில் தமிழகமெங்கும் அனைத்துப் பதவிகளுக்கும் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்கு காங்கிரஸ் சகோதர, சகோதரிகள் கண் துஞ்சாது கடுமையாக உழைத்திட பெரிதும் வேண்டுகிறேன்.

இன்றைய உள்ளாட்சித் தேர்தலில் நாம் பெறும் வெற்றி நாளைய தமிழகத்தில் காமராஜர் ஆட்சிக்கு அடித்தளம் என்பதை உணர்ந்து உற்சாகத்தோடு பணியாற்றுவோம்.

காங்கிரஸ் வேட்பாளர்கள் மக்கள் மத்தியில் ஆதரவு கோரும் தேர்தல் பணியில் அனைத்து காங்கிரஸ் சகோதர, சகோதரிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். தேர்தல் பிரச்சார நிகழ்ச்சிகளில் யாரும் எவ்வித பாகுபாடும் காட்டாமல் காங்கிரஸ் வெற்றி என்பதை மட்டுமே கவனத்தில் கொண்டு களப்பணியாற்றிட வேண்டுகிறேன்.

காங்கிரசுக்கு சாதகமான இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஆங்காங்கே சில இடங்களில் காங்கிரஸ்காரர்கள் சிலர் போட்டி வேட்பாளர்களாக மனு செய்திருக்கிறார்கள். அவர்கள் காலம் கடத்தாமல் தனது நிலையை மாற்றிக் கொண்டு அதிகாரப்பூர்வமான காங்கிரஸ் வேட்பாளர்களோடு இணைந்து பிரச்சாரத்திற்கு வர வேண்டும்.

அதற்குப் பிறகும் கட்சிக் காட்டுப்பாட்டை மீறி செயல்படுபவர்கள் மீது மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(கே.வீ. தங்கபாலு)